4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No.45/2025** **நாள்: 12.03.2026** **ம.சா.2 – அப்புராஜ்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் கிருஷ்ணமூர்த்தி என்பவர் இறந்துவிட்டார். மனுதாரர்கள் எனக்கு தெரிந்தவர்கள். விபத்து இரவு பொள்ளாச்சி – தாராபுரம் சாலையில் நடந்தது. விபத்து எந்த தேதியில் நடந்தது என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் 4 சாலைகள் சந்திக்கும் இடம் என்றால் சரிதான். 4 சாலைகள் சந்திப்பில் ஒரு பேக்கரி உள்ளது, அதில் நான் நின்று கொண்டிருக்கும் போது நான் விபத்தை பார்த்தேன். விபத்து நடந்த இடத்திற்கும் நான் நின்ற இடத்திற்கும் இடையே சுமார் 10 மீட்டர் இடைவெளி இருக்கும். நான் சொல்வது போல் 10 மீட்டர் இடைவெளியில் நான் சம்பவத்தை பார்க்கவில்லை, ரோட்டிற்கும், பேக்கரிக்கும் இடையே 10 மீட்டர் இடைவெளி இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் நின்று கொண்டிருந்த கடை பணத்தம்பட்டி செல்லும் சாலையாகும். விபத்து நடந்த சாலை பொள்ளாச்சி – தாராபுரம் செல்லும் சாலையாகும். மேற்படி பணத்தம்பட்டி செல்லும் சாலை தெற்கு நோக்கி செல்லும் சாலையாகும். பொள்ளாச்சி – தாராபுரம் சாலை கிழமேல் சாலையாகும். நான் விபத்து நடந்த இடத்திலிருந்து அதிக தொலைவில் நின்று கொண்டு விபத்தை பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி இருசக்கர வாகனத்தில் மேலும் இரு

நபர்களான தமிழ்செல்வன், சரவணகுமார் ஆகியோர்களை வைத்துக்கொண்டு அதாவது தமிழ்செல்வன் ஓட்ட சரவணகுமாரும், கிருஷ்ணமூர்த்தியும் பின்னால் அமர்ந்து வந்தார்கள். மேற்படி நபர்கள் பூளவாடி ரோடான தென்வடல் சாலையிலிருந்து தாராபுரம் – பொள்ளாச்சி செல்லும் கிழமேல் சாலைக்கு வந்தார்கள். மேற்படி விபத்து சமயத்தில் 3 நபர்களும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். மேற்படி மூவரும் இரு சக்கர வாகனத்தில் கிளைசாலையிலிருந்து பொளளாச்சி – தாராபுரம் சாலையில் அதிவேகமாக சாலைவிதிகளுக்கு புறம்பாக 3 நபர்களாக பயணம் செய்து பேருந்து வருவதை கவனிக்காமல் வந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரியல்ல. கிளைசாலையிலிருந்து பிரதான சாலைக்கு வரும் போது கிளைசாலையில் வருபவர்கள்தான் பிரதான சாலையில் வாகனம் வருகிறதா என்று பார்த்து வரவேண்டும் என்றும், அவ்வாறு 3 நபர்களும் பார்த்து வராததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு இரு சக்கர வாகனத்தில் வந்த தமிழ்செல்வனின் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரர்கள் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.12 14:18:23 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.